1996 பிப்ரவரி 22]

முற்பகல் 11.05

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாட்கோ நிறுவனம் ஆதிதிராவிட மக்களுடைய நலத் திட்டங்களை, அதாவது அவர்களுக்கு வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகக் கடனாகவும், மானியமாகவும் வழங்கக்கூடிய ஒரு நிறுவனம். ஆகையினால் மக்களினுடைய நலனில் அக்கறை கொண்ட இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியில் இதுபோன்ற கடன்களை வழங்கிக் கொண்டிருக்கிறோம். புத்தகங்களை எழுதுவது, தனிப்பட்ட நபர் என்கின்ற முறையில் அவர்களுக்கு வழங்குவதற்கு வாய்ப்புகள் இல்லை, சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 97, திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

97—

குரும்பர் இனத்தை பழங்குடியினர் பட்டியலில் சேர்த்தல்

****73336—திரு. கே. செல்வராஜ்:***

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் வாழும் குரும்பர், குரும்பன், குரும்பா, குரும்பர்கள், குரும்பாஸ் என பல பிரிவுகளாக அழைக்கப்படும் குரும்பர் இன மக்களை ஒன்று சேர்த்து பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குரும்பர், குரும்பன், குரும்பர்கள் மற்றும் குரும்பாஸ் இன மக்களிடமிருந்து தங்களின் இனங்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கக் கோரும் கோரிக்கை மனுக்கள் மானிட இயல் வல்லுநர் குழுவிற்கு ஆய்விற்காக அனுப்பப்பட்டுள்ளது.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் குரும்பர், குரும்பாஸ், குரும்பன், குரும்பர் எனப் பல பெயர்களில் அழைக்கப்படும் மக்களை, இந்தப் பிரிவுகளாக உள்ள மக்களை, சமுதாய மக்களின் பழக்க வழக்கங்கள், திருமணங்கள், உறவு முறைகளில் ஒற்றுமையாக உள்ளதால் தாயுள்ளத்தின்

தனிப்பெருந்தலைவியான டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழக மக்களின் உள்ள உணர்வுகளை, சமுதாய மக்களின் உணர்வுகளை ஏற்று, அந்தந்த மக்களினுடைய அடிப்படை உரிமைகளைத் தாயுள்ளத்தோடு பரிசீலனை செய்கின்ற டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எங்களது இந்தக் கோரிக்கையைப் பரிசீலனை செய்து, இன்றைக்குக் குரும்பா, குருபா, குரும்பன்ஸ், குரும்பன் என்கின்ற பல பெயர்களில் உள்ள மக்களை ஒன்றாக இணைத்து குரும்பர் என அழைக்கும்விதத்தில், இருக்கின்ற பல பிரிவுகளை ஒரே பிரிவாகச் சேர்த்து அரசு அறிவிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். அதோடு, தமிழகத்தில் சுமார் 40 இலட்சம் குரும்பர்கள், மலைப் பகுதிகளில், கிராமப் பகுதிகளில், அடிப்படை வசதிகள் இல்லாத ஏழைகளாக வாழ்ந்து வருகிறார்கள். இந்தக் குரும்பர் சமுதாய மக்களை வாழ வைக்க, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இதற்காக, தனியாக, கருணைகூர்ந்து இந்தச் சமுதாய மக்களைக் காப்பாற்ற இந்தக் குரும்பர் சமுதாய மக்களை, மிகவும் பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் உள்ள மக்களைக் காப்பாற்றவும், படிப்பறிவில்லாத, தொழில் ரீதியாக முன்னேற்றமும், வேலைவாய்ப்பும் இல்லாத, மிகவும் கஷ்டப்படுகின்ற குரும்பர் சமுதாய மக்களின் வறுமையை அகற்ற, அவர்களது வாழ்க்கையில் ஒளிவிளக்கு ஏற்றி வைக்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் குரும்பர் சமுதாயத்தை மலைவாழ் மக்கள் பட்டியலில் சேர்த்து, ஷெட்யூல்ட் ட்ரைப்ஸ், எஸ்.டி. பிரிவில் சேர்க்க மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலனையில் உள்ளதாகக் கூறினார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்களின் பாதங்களைத் தொட்டு, இந்தச் சமுதாய மக்களின் சார்பாக நான் கேட்டுக் கொள்கிறேன், மாண்புமிகு அமைச்சரவர்கள் மாண்புமிகு முதலமைச்சரவர்களோடு கலந்து, இந்தச் சமுதாய மக்களை எஸ்.டி. பிரிவில் சேர்த்து, இந்த ஆட்சியிலேயே அறிவிப்பார்களா, அதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குரும்பா, குரும்பாஸ், குரும்பன்ஸ், குரும்பர், வேட்டைக்காரன், சிகாரி நாயக்கன், குருவிக்கார நாயக்கன், மூங்கில் முடைவோர், வேட்டுவன், வேடன், சோழகர், சோழகன் போன்ற இனங்களை மலை ஜாதியினர் பட்டியலில் இணைப்பது குறித்து மைய அரசுக்குப் பரிந்துரை செய்ய வேண்டி ஓர் ஆய்வு அறிக்கையைப் பெறுவதற்காகத் தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் தலைமையின்கீழ் ஒரு குழுவை ஏற்படுத்தி, 31-3-92 அன்று ஆணையிட்டார்கள். இக்குழுவில் சென்னைப்

[1996 பிப்ரவரி 22]

பல்கலைக் கழகம், மானிட இயல் துறையைச் சேர்ந்த வல்லுநர்கள் டாக்டர் வி. கருப்பையன், டாக்டர் கோவிந்தரெட்டி, பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சிப் படிப்பு மேற்கொண்டுள்ள நான்கு ஆய்வாளர்கள், இன்வெஸ்டிகேட்டர்ஸ், ஆதி திராவிடர் நல இயக்குநரகத்தில் மலைவாழ் மக்கள் மேம்பாட்டைக் கவனிக்கும் இணை இயக்குநர், சமூக இயலாளர் மற்றும் ஆராய்ச்சி அலுவலர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இக்குழு பல்வேறு கட்டங்களில் நேரடி விசாரணை செய்து தனது ஆய்வு அறிக்கையைத் தற்போது அரசுக்கு அளித்துள்ளது. அந்த அறிக்கை உரியபடி பரிசீலிக்கப்பட்டு, மைய அரசுக்கு விரைவில் பரிந்துரை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984-லேயே மாண்புமிகு அன்றைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்தக் குரும்பர் சமுதாய மக்களை எஸ்.டி.யில் சேர்க்க வேண்டுமென்று மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து அங்கு கோப்புகளும் அனுப்பப்பட்டுள்ளன. ஆனால் இன்றைக்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தலைமையில் 92-இல் அதிகாரிகள் அனுப்பிய அவர்களுடைய விவரப் பட்டியல்படி இன்றைக்கு இந்தச் சமுதாய மக்களை எஸ்.டி.யில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்கள். ஆனால் நடவடிக்கை எடுக்கின்ற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆட்சிக் காலத்திலேயே எங்களது சமுதாய மக்களை, மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ள மக்கள், இன்றைக்கு எப்பொழுது தேர்தல் வந்தாலும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது தலைமைக்கு வாக்களிக்கின்ற இந்த 40 இலட்சம் மக்களைக் காப்பாற்றுகின்ற விதத்தில் எஸ்.டி. பிரிவில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்றும், நடவடிக்கை எடுத்து இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா எனவும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஒரு இனத்தவரையும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதோ, நீக்குவதோ மைய அரசின் அதிகார வரம்பிற்குட்பட்டதாகும். ஆகையினால், நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு இதுபோன்ற கோரிக்கைகள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு, மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டது. மத்திய அரசுதான் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

[1996 பிப்ரவரி 22

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. ரவிச்சந்திரன்.

திரு. வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் செல்வராஜ் பேசும்போது குரும்பர்கள் மலைப் பகுதியிலே வாழ்கிறார்கள் என்ற ஒரு தவறான கருத்தைத் தெரிவித்தார்கள். அதுபோன்ற மலைப் பகுதிகளில் அவர்கள் வாழவில்லை என்பதை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே குரும்பன்ஸ் என்று இருப்பதை பரிந்துரை செய்து நாம் மத்திய அரசுக்கு அனுப்பி இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். குரும்பன்ஸ் என்பது ஏற்கெனவே எஸ்.டி.யில் இருந்து கொண்டிருக்கிறது. பொதுவாக இதுபோன்ற இனத்தைச் சார்ந்தவர்கள் ஆடு மேய்க்கும் தொழிலைக் கொண்டு மலைப் பகுதியில் வாழ்ந்து கொண்டிருந்த காரணத்தினாலே அவர்கள் குரும்பார், குரும்பர், குரும்பன்ஸ் என்று எல்லாம் அழைக்கப்படுகிறார்களேயொழிய அவர்களுக்கு 'ன்'-க்கும், 'ர்'-க்கும் இருக்கக்கூடிய வித்தியாசம் காரணமாக இந்தமாதிரி பிரச்சினைகள் வந்துகொண்டிருக்கின்றன. ஏற்கெனவே குரும்பன்ஸ் என்று எஸ்.டி.-யிலே இருக்கிற காரணத்தால் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் எப்படி முத்திரையர் போன்றவர்கள் பல பிரிவுகளில் இருந்தவர்களை எல்லாம்கூட முத்திரையர் என்று அழைக்கப்படுவர் என்று சொன்னதுபோல, இவர்களுடைய அந்த வாழ்க்கை வரலாற்றை ஆராய்ந்து பார்த்தும், அவர்கள் காடுகளில் வாழ்ந்து ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தவர்களாக இருந்த காரணத்தாலும், ஏற்கெனவே எஸ்.டி. பட்டியலில் இருக்கின்ற காரணத்தினாலும், குரும்பாஸ், குரும்பர் என்று இருப்பதையெல்லாம் குரும்பன், 'ன்' போட்டே அழைக்கப்படுவார்கள் என்று ஒரு வார்த்தையில் உத்தரவிட்டுவிட்டால் இந்த எஸ்.டி. என்ற பிரச்சினை மிக எளிதாக தீர்ந்துவிடும் என்கிற காரணத்தாலும், மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யாமலேயே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், குரும்பன்ஸ் என்று அழைக்கப்படுவார்கள் என்று உத்தரவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் கேட்ட கேள்விக்கு அதுபோன்ற ஆய்வுகள் நடத்தப்பட வேண்டுமென்பதால் முதலமைச்சர் அவர்கள்

1996 பிப்ரவரி 22]

ஆணையிட்டு ஆய்வுகள் மேற்கொண்டிருக்கிறோம். ஆய்வுகள் சரியாக பரிசீலிக்கப்பட்டு அதன் பிறகுதான் மத்திய அரசுக்கு பரிந்துரைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 98, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

98—

மீனவர் இல்லங்கள் கட்டுதல்

*** 60943**—திருமதி கவிநிலவு தர்மராஜ்:

மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், அரச்சலூரில் மீனவர் இல்லங்கள் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், மீனளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடலோரத்தில் வாழும் மீனவர்களுக்கு மட்டுமே அரசால் இலவச வீடுகள் கட்டி வழங்கும் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. கடலோர மீனவர்கள் தங்களுக்கு சொந்தமான 3 செண்ட் பட்டா நிலத்தை துறை வசம் ஒப்படைத்தால், அந்நிலத்தில் இலவச மீனவர் வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டி வழங்கப்பட்டு வருகிறது. மொடக்குறிச்சி ஒன்றியம் அரச்சலூரை சார்ந்த மீனவர்கள் உள்நாட்டு மீனவர்கள். உள்நாட்டு மீனவர்களுக்கு இதுவரை வீடுகள் கட்டி வழங்கப்படவில்லை என்பதால் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் வீடு இல்லாத உள்நாட்டு மீனவர்களுக்கு வீடு வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

> "எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
> திண்ணிய ராகப் பெறின்"

என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கு ஏற்ப, எண்ணிய கருத்தை திண்ணிய மனதோடு ஆற்றிக்கொண்டிருக்கிற மாண்புமிகு இதயதெய்வத்தின் புண்ணிய ஆட்சியில், மீனவர்கள் சமுதாயத்தைப் பொறுத்தவரை உள்நாட்டு